**நிக்கவெரட்டிய பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 ஏப்ரல் 20 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2020 யூன் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 யூலை 31 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து நிக்கவெரட்டிய பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | கடந்த ஆண்டு கணக்காய்வாளரின் சுருக்கமான அறிக்கையில் காட்டப்பட்டிருந்த (அ), (ஆ), (உ), (ஊ), (ஒ), (க),(கா),(கெ) ஆகிய கணக்கீட்டு குறைபாடுகளை சரிசெய்யாது மீளாய்ாண்டில் நிதிக் கூற்றுகள் தயாரிக்கப்பட்டிந்தன | தேவையான சீராக்கம் செய்யப்படல் வேண்டும் | நாட்குறிப்பு பதிவுகளை இட்டு அதனை சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | பரீட்சை மீதியின் பிரகாரம் சுகாதார சேவை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உதவிப் பணம், பங்களிப்புப் பணம் மானிய உதவிச் செலவினம் ரூபா 336,103 ஆக இருந்த போதிலும் நிதிக் கூற்றுக்களின் பிரகாரம் அது ரூபா 183,019 ஆக இருந்நது. | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் | நாட்குறிப்பு பதிவுகளை இட்டு அதனை சீராக்குவதாக அறிவிக்கப்பட்டிருந்தது |
| (இ) | இருப்புநிலைக் குறிப்பில் காட்டப்பட்டுள்ள 13 கணக்கீட்டு நிலுவைகளின் கூட்டுத்தொகையான ரூபா 14,596,261 நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் | நூல்நிலைய வைப்பீடு, இயந்திர உபகரணங்கள் வைப்பீடு, தொழில்நுட்ப வைப்பீடு ஆகிய கணக்குகள் முன்னைய ஆண்டுகளிலிலிருந்து |

| | | | |
|---|---|---|---|
| | | | இருந்து வரும் கணக்குகளாகும் என தயவாய் தெரிவித்துக்கொள்கிறேன். |
| (ஈ) | மீளாயவாண்டின் இறுதியில் ஆதனவரி நிலுவை ரூபா 2,932,169 குறைத்து காட்டப்பட்டிருந்த. | சரியாக கணக்கீடு செய்யப்படல் வேண்டும் | ஆதனவரி நிலுவை குறைத்துக் காட்டப்பட்டிருப்பதை சரிசெய்வதாக தயவாய் தெரிவித்துகொள்கிறேன். |
| (உ) | கிடைக்க வேண்டியிருந்த 10 கணக்குகளின் வருட இறுதி மீதிகள் நிதிக் கூற்றுகளில் சரியாக பதியப்பட்டிருக்காததுடன், 2017,2018 2019 ஆகிய மூன்று வருடங்களிலும் ஒரேயளவான பெறுமதி காட்டப்பட்டிருந்நது. | சரியாக பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | Excel பரவுதாளைப் பயன்படுத்தி கணக்குகளைத் தயாரிக்கையில் ஏற்பட்ட தவறு காரணமாக நடப்பு ஆண்டில் பெறுமதிகள் இக்கணக்குகளில் பதியப்படாததுடன், அவ்வாறு வேறுபடும் கணக்கு மீதிகளை சரிசெய்வதாகவும் தயவாய் தெரவித்துக் கொள்கிறேன். |
| (ஊ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய சம்பள ஈடுசெய்தல் தொகையான ரூபா 1,444,071 மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | தவறுதலாக ஏற்பட்ட பிழையின் காரணமாக சம்பளம் ஈடுசெய்தல் தொகை ரூபா 1,444,071 மேலதிகமாக கணக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், அதனை சரிசெய்வதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (எ) | மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,044,050 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நீதிமன்றத் தண்டப் பணத்தை தவறுதலாக குறைத்து பதியப்பட்டுள்ளதுடன் அதனை சரிசெய்வதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஏ) | மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் ரூபா 11,848,605 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | சரியாக பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | தவறுதலாக கிடைக்க வேண்டிய முத்திரைக் கட்டணம் குறைத்து பதியப்பட்டுள்ளதுடன் அதனை சரிசெய்வதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மீளாய்வாண்டின் இறுதியில் கிடைக்க வேண்டியிருந்த வாடகை கணக்கு மீதி ரூபா 2,431,451 மேலதிகமாக நிதிக் கூற்றுகளில் குறிப்பிடப்பட்டிருந்தது. | சரியாக பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | கிடைக்க வேண்டிய வாடகைக் கணக்கு மீதிகள் மேலதிகமாக நிதிக் கூற்றுகளில் பதியபட்டிப்பதை சரிசெய்வதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (ஒ) | மீளாய்வு ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 2,467,076 பெறுதியான ஒரு தொகைப் பொருட்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | ரூபா 2,467,077 பெறுமதியான ஒரு தொகைப் பொருட்கள் கணக்கீடு செய்யப்படாமல் விடுபட்டிருந்தமை நாட்குறிப்பேட்டுக் குறிப்பின் மூலம் சரி செய்ததாக தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். |
| (ஓ) | மீளாய்வாண்டிலும், முன்னைய ஆண்டிலும் பூரணப்படுத்திய ரூபா 7,180,233 பெறுமதியான 09 அபிவிருத்தி திட்டங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | மூலதனச் செலவினத்தை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | 09 அபிவிருத்தித் திட்டங்களின் பெறுமதியை சரிசெய்வதாக தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். |
| (ஔ) | மீளாய்வாண்டின் திசம்பரில் நிலையில் கட்டளையின் பிரகாரம் வங்கியினால் செலுத்தப்பட்ட ரூபா 791,146 மற்றும் வங்கிக் கட்டணம் ரூபா 7,550 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | நேரடியான வரவு மற்றும் செலவு வைத்தல் இனங்காணப்பட்டு கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | சுகாதார நிலையத்தின் கடன் தவணையைக் செலுத்துவதற்காக வங்கியினால் நிலையியல் கட்டளையின் பிரகாரம் செலுத்தப்பட்ட ரூபா 791,146 மற்றும் வங்கிக் கட்டணமான ரூபா 7,550 ஆகியன பதியப்படாமை நாட்குறிப்பேட்டு குறிப்பின் மூலம் சிசெய்வதாக தயவுடன் தெரிவித்துக கொள்கிறன். |
| (க) | மீளாய்வாண்டின் இறுதித் தினத்துக்கு கையிலிருந்த பண மீதித் தொகையான ரூபா 88,582 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | சரியாக பெறுமதியை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | கருத்து தெரிவிக்கப்படவில்லை |

| | | | |
|---|---|---|---|
| (கா) | மீளாய்வாண்டின் இறுதியில் 10 கணக்கு விடயங்களுடன் தொடர்புபட்ட மீதிகள் மற்றும் அவற்றுடன் தொடர்பான பயன்பாட்டு ஆவணங்களில் இருந்த மீதிகளுக்கிடையே ரூபா 74,027,258 வேறுபாடு காணப்பட்டது. | உரிய மீதிகளில் வேறுபாடுகள் ஒப்பிடப்பட்டு கணக்குகளை சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும் | நாட்குறிப்பு குறிப்பு மூலம் சரிசெய்வதாக தெரிவித்துக் கொள்கிறேன். |
| (கி) | ரூபா 20,866,612 பெறுமதியான 09 கணக்கு விடயங்கள் தொடர்பான விரிவான தகவல்களைக் கொண்ட துணை ஆவணங்கள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | கணக்காய்வுச சான்றுகள் நிதிக் கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் | விரிவான துணை ஆவணங்களுடன் கணக்குகளைத் தயாரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்தாக தயவுடன் அறியத்தருகிறேன். |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டம், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்து தீர்மானங்களுடன் இணங்காமைக்கான சந்தரப்பங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1987 ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டம் 159 (1) | பொது வசதிகள் மற்றும் சுகாதா நிலையத்தின் 10 கடைகளில் இருந்து கிடைக்க வேண்டிய ரூபா 676,550 வாடகை நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் | நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்காக கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன், குறித்த காலத்துக்குள் கொடுப்பனவு செய்யாத கடை உரிமையாளர்களுக்கு எதிராக சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிரவாகம்) விதி<br>----------------<br>விதி 32-42 | | | |
| | | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு 17 வீதிகளுக்குரிய 2202 சொத்துக்களில் இருந்து 5,074,508 பெறுமதியான ஆதன் வரியை அறவீடு செய்வதவற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்வில்லை. | நிலுவை பணத்தை அறவிடப்பட வேண்டும் | 2020 ஆண்டில் குறித்த நிலுவைப் பணத்தில் ரூபா 492,066.43 அறவீடு செய்யப்பட்டுள்ளதுடன், மீளாய்வாண்டில் ரூபா 2,235,868.18 பணம் அறவீடு செய்யப்பட்டுள்ளது. ஆதனவரி அறவீடு செய்வதில் சிக்கல் காணப்படுவதுடன், அதன்மூலம் நிலுவை பணம் கூடிச் செல்வதைக் காணக்கூடியதாக உள்ளது. |
| (ii) | விதி 33 | கொடுப்பனவு செய்யாது அதனை தட்டிக் கழிக்கும் நபர்களின் பட்டியல் ஒன்றும் சொத்துக்களை தடை செய்யும் உத்தரவு ஒன்றும் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் தயாரிக்கப்பட்டிக்க வில்லை | கொடுப்பவு செய்யாமல் அதனை தட்டிக்கழிக்கும் நபர்கள்பற்றிய பட்டியலொன்று தயாரிக்கப்பட்டு தலைவருக்கு வழங்க வேண்டும். | எதிர்காலத்தில் ஒவ்வொரு காலாண்டின் இறுதியிலும் நிலுவை தொடர்பான அறிக்கைகளைப் பெற்று தலைவருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |
| (iii) | விதி 218 | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக வருடாந்த கணிப்பீடொன்று மேற் கொள்ளப்பட்டிருக்க வில்லை. | காணி கட்டிடங்கள் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டும். | காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக 2019 ஆம் ஆண்டில் கணிப்பீடொன்றை மேற்கொள்ளப்பட வில்லை.2020 திசெம்பர் 31 இல் வருடாந்த கணிப்பீடொன்று மேற்கொள்வதாக தயவுடன் அறிய தருகிறேன். |

## 02. நிதி மீளாய்வு

## 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 60,270,266 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 17,408,658 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உண்மையான வருமானம் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,320,062 | 54,607,886 | 6,760,982 | 2,183,647 | 7,010,062 | 6,860,062 | 4,372,827 | 4,772,157 |
| (ii) | வாடகை | 16,076,000 | 16,076,000 | 16,659,781 | 7,083,169 | 19,066,000 | 10,066,000 | 16,178,203 | 4,861,492 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,266,000 | 1,065,000 | 881,786 | 80,400 | 1,212,300 | 1,212,300 | 845,575 | 80,400 |
| (iv) | ஏனைய வருமானம் | 97,940,116 | 97,740,116 | 19,620,699 | 28,627,925 | 74,394,914 | 74,394,914 | 68,761,436 | 26,616,340 |
| | மொத்தம் | 122,602,178 | 169,489,002 | 43,923,248 | 37,975,141 | 101,683,276 | 101,533,276 | 90,158,041 | 36,330,389 |

**குறிப்பு:-** நிதிக்கூற்றுகள் மீதிகள் மற்றும் சபையினால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களுக்கிடையே பொருந்தாமை காணப்பட்டது அதன்காரணமாக மீளாய்வாண்டில் ஜனவரி 01 க்கு இருந்த மீதி மற்றும் மீளாய்ாண்டில் இருந்த நிலுவை மற்றும் மீளாய்வாண்டில் சிட்டைப்படுத்தி, சேகித்த வருமானத்தின் பின்னர் மேலும் அறவீடு செய்யவேண்டிய மீதி மற்றும் நிதிக்கூற்றுகளின் பிரகாரம் மீளாய்வாண்டில் திசெம்பர் 31 திகதி அறவீடு செய்ப்பட வேண்டிய மீதிக்களுக்கிடையே பொருந்தாமை காணப்பட்டது

### 2.2.2 வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 ஆந் திகதி நிதிக் கூற்றுகக்ளின் பிரகாரம் அறவீடு செய்யப்பட வேண்டிய ஆதனவரி மற்றும் வரி மீதி ரூபா 2,183,647 ஆக இருப்பினும் அதன் பெறுமதி முன்னைய ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதி இருந்த மீதியாகும். ஆயினும், சபையினால் கணக்காய்வுக்கு வழங்கப்பட்ட தகவலின் பிரகாரம் ரூபா 5,074,508 ஆதன வரித் தொகை அறவிட வேண்டியிருந்தது. | ஆதன வரி நிலுவையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | Excel பரவுத்தாளைப் பயன்படுத்தி கணக்குகளை தயார் செய்கையில் மேற்படி தவறு ஏற்பட்டுள்ளதுடன், அதனை சரிசெய்து எதிர்காலத்தில் கணக்குகளைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். |

### 2.2.3 வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் இறுதியில் 22 நிரந்தர கடைகளில் இருந்து ரூபா 428,409 உம், 06 மரக்கரி பழக்கடை கூடங்களிலிருந்து ரூபா 75,030 உம் சுகாதாரம் மற்றும் பொது வசதிகள் நிலையத்திலிருந்து ரூபா 789,250 உம் அறவீடு செய்யப்பட வேண்டியிருந்தது. | உடனபடிக்கையின் பிரகாரம் நிலுவை மீதியை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | நிலுவைப் பணத்தை அறவீடு செய்தவற்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், குறித்த காலத்துக்குள் கொடுப்பனவு செய்யப்படவில்லையாயின் சட்டத்தின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பதாகவும் தயவுடன் அறியத்தருகிநேன் |
| (ஆ) பேரூந்து நிலைய கடைகளின் மதிப்பீட்டு அறிக்கை 2016 சனவரி 25 ஆந் திகதி கிடைத்ததன் பின்னர் புதிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் சபைக்கு 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1,501,150 வருமானத்துடன் சேர்த்து 2019 வருடாந்த | குறித்த வாடகைத் தொகையை அறவீடு செய்து சபையின் வருமானத்தை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | கீழ் மாடியில் உள்ள கடைகளின் வாடகைப் பணத்தை 2016 ஜனவரி 25 மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதுடன், ஒப்பந்தம் கைச்சாத்திடுவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துக் கொள்கிறேன். மேல் மாடியில் கடைகளின் வாடகைப் பணம் அறவீடு செய்வது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளரின் |

| | | | |
|---|---|---|---|
| | மதிப்பீட்டு வாடகையும் சபைக்கு இழக்கப்பட்டிருந்தது. | | அனுமதியைப் பெற்றுக்கொண்டு எதிர்வரும் நடவடிக்கை மேற்கொள்வதாக தயவுடன் அறியத்தருகிறேன். |
| (ஆ) | பேருந்து நிலைய கடைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியில் 15 கடைகளிலிருந்து ரூபா 688,385 அறவடப்பட வேண்டியிருந்ததுடன் 2020 யூலை 13 ஆந் திகதி வரை ரூபா 564,500 மேலும் அறவிடுவதற்கு காணப்பட்டது. | மாதாந்த வாடகை மற்றும் நிலுவை மீதிகளை உரிய பிரகாரம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ரூபா 123,8885 தொகை அறவிடப்பட்டுள்ளதாக தயவுடன் அறிய தருகின்றேன். |

## 03. செயற்பாட்டு மீளாய்வு

---------------------------------------

### 3.1 செயலாற்றல்

----------------------

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் பிரதான 30 விடயங்களை உள்ளடங்கிய துணை காரணிகளை நிறைவேற்றுவதற்கு உப விதிகளை விதிக்க வேண்டியிருந்தும், மீளாய்வாண்டு முடிவடையயும் நிலையிலும் சபையின் தேவையின் அடிப்படையில் உப விதிகள் விதிக்கப்படாதிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்ட உப விதிகள் மற்றும் வடமேல் மாகாண உப விதிகள் ஆகியவற்றை ஏற்றுக்கொண்டு அதற்கமைய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. வாடகை முச்சக்கர வண்டிகளை நிறுத்துவது தொடர்பாக உப விதி ஒன்று தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சி மன்றத்திற்கு வழங்கி மூன்று வருடங்கள் கடந்தும் அதற்கான அனுமதி கிடைத்திருக்கவில்லை. | சபையின் தேவையின் பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கும், விதிக்கப்பட்டுள்ள உப விதிகளின் பிரகாரம் செயற்படுவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். | வாடகை வண்டிகளை நிறுத்தி வைப்பது தொடர்பாக உப விதியொன்றை தயாரித்து அதனை அங்கீகரிக்கபட்ட உப விதியாக மாகாண சபையினால் அங்கீகரிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பதாக அப்போதிருந்த உள்ளூராட்சி திணைக்களம் வாய்மொழியாக அறியத்தந்துள்ள மையால் அதற்கு அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் செயற்பாடு நிறுத்தப்பட்டுள்ளதாக தயவுடன் அறியத்தருகிறேன். |

## (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பாக சபை அறிந்திருந்த போதிலும், 2019 ஆம் ஆண்டிற்காக அளவு சார்ந்த வகையிலும் திட்டமிடப்பட்ட வகையிலும் இலக்கு, குறிகாட்டிகளை முன்கூட்டியே ஆவணப்படுத்தி, இலக்குகளை அடைந்து கொள்வதில் உள்ள முன்னேற்றத்தை மீளாய்வுக்குட்படுத்தி வரும் ஆண்டுக்காக திட்டமிடல் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | நோக்குகள் மற்றும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கு முடியுமான விதத்தில் வரவுசெலவுத்திட்டத்தை தயாரித்து நிகழ்ச்சித் திட்டங்களை செயற்படுத்தல் வேண்டும். | ''நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030'' தொடர்பாக 2018 நவம்பர் 02 ஆந் திகதி சபையில் பயிற்சிப் செயலமர்வொன்றை நடாத்தி ஊழியர்கள் அனைவரும் தெளிவுபடுத்தப்பட்டனர். அதற்கமைய பாதீட்டை தயாரிக்கும் போது பட்டினியை ஒழித்தல், அனைவருக்கும் ஆரம்பக்கல்வியை வழங்குதல், பெண்களை வலுவூட்டுதல் மற்றும் தாய்மார்கள் சுகாதாரத்தை மேம்படுத்தல் போன்ற இலக்குகள் ஆவணப்படுத்தப்பட்டு தேவையான நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்தி உரிய விடயங்கள் செய்யப்பட்டுள்ளன என்பதை தயவுடன் அறியத்தருகிறேன். |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) நிக்கவெரட்டிய பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தில் கீமணி முறையில் கடைகளைப் பெற்றுக்கொண்ட கேள்விதார்களுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமையினால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரை சபைக்கு ரூபா 676,550 வருமான இழப்பு ஏற்பட்டிருந்தது. | இக்குறைபாடுகள் உடனடியாக சரி செய்யப்பட்டு வருமானத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாத சகல கடைச் சொந்தக்கார் களுக்கும் ஒப்பந்தத்தைக் கைச்சாத்திட வருமாறு அறிவித்து கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், கடைகளை ஆரம்பித்த தினத்திலிருந்து நிலுவைப் பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் தெரிவித்துக் கொள்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | பொது வசதிகள் மற்றும் சுகாதார நிலையத்தின் கடைகளை வாடகைக்கு வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகைக்காரரினால் கடைகளை வேறொருவருக்கு வழங்கக்கூடாது என குறிப்பிடப்பட்டிப்பினும் 03 வாடகைக்காரர்களினால் கடைகள் துணை வாடகைக்கு வழங்கப்பட்டடிருந்தன. | உப குத்தகை வழங்குது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதுடன் ஒப்பந்தத்தின் பிரகாரம் வாடகைப் பணத்தை அறவீடு செய்தல் வேண்டும். | ஒப்பந்தத்தின் பிரகாரம் உப குத்தகைக்கு வழங்க முடியாது என ஏற்றுக்கொள்கிறேன். இது தொடர்பாக எதிர்காலத்தில் ஒப்பந்தத்தில் உள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் நடவடிக்கை எடுப்பபேன். பணம் செலுத்தாத சகல சொத்துக்களையும் சீல் வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். |
| (இ) | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 107,562,587 ஆக இருந்ததுடன், அம்மீதியில் 01 வருடத்துக்கு மேற்பட்ட 03 வருடங்களுக்கு குறைந்த காலப்பகுதிக்கு ரூபா 10,281,370 உம், 03 வருடங்களை விட கூடிய 05 வருடங்களுக்கு குறைந்த காலப்பகுதிக்கு ரூபா 4,868,954 உம் 05 வருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதிக்கு 842,470 மீதியும் காணப்பட்டது. 2020 யூலை 13 ஆந் திகதி வரை ரூபா 106,553,640 இன்னும் தீர்வுசெய்யப்பட இருந்தது. | மேலும் செலுத்த வேண்டியிருக்கும் நிலுவைத் தொகையை செலுத்துதல் வேண்டும். | கேள்வி வைப்பீட்டின் கீழ் ரூபா 750,178.33 பெறுமதியான தொகை வருமானமாக பெற்றுக் கொள்ளப்பட்டதுடன், ரூபா 258,768.74 பெறுமதியான தொகை விடுவிக்கப்பட்டுள்ளது. |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**
-------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியாகும் போது 28 இரண்டாம் தர பதவிகள் அனுமதிக்கப்பட்டிருந்ததுடன், உண்மையான ஆளனியினர் தொகை 42 ஆகும். அங்கு 14 மேலதிக ஆளனியும் 07 பதவி | அத்தியாவசியமான வெற்றிடங்களை நிரப்புவதற்கும், மேலதிகமான ஆளனியினரை ஒழுங்குபடுத்திக் கொள்ளவும் நடவடிக்கை | இரண்டாம் தர் தொகை அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகரித்தமைக்கு காரணம் உள்ளுராட்சி திணைக்களத்தினால் |

| | | | |
|---|---|---|---|
| | வெற்றிடங்களும் காணப்பட்டன. ஆரம்பப் பிரிவில் 12 வெற்றிடங்களும் 03 மேலதிகமும் காணப்பட்டன. | எடுத்தல் வேண்டும். | இணைக்கப்பட்ட 21 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இருப்பதாகும். அதேபோன்று 07 பதவி வெற்றிடங்களும் காணப்படுகின்றன. |

## 3.4 பெறுகை

### 3.4.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபா 1,699,201 தொகை செலவில் பூர்த்தி செய்யப்பட்ட கிரியுள்ள நேபட வீதிக்கு தார் இட்டு அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில் காணப்பட்ட குறைபாடுகள் தொடர்பாக கவனத்தில கொள்ளாது சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தர், உள்ளூராட்சி பொறியியளார் மற்றும் நிர்மாண வேலை அதிகாரி ஆகியோரின் பரிந்துரையின் அடிப்படையில் ரூபா 169,920 நிறுத்தி வைத்தல் பணத்தை விடுவிப்பதற்கு அனுமதியளிக்கப்பட்டிருந்நது.<br>எனினும் வீதியை பௌதீக ரீதியாக பரீட்சித்த போது வீதியின் ஆரம்பம் முதல் 20 மீற்றர் வரையான பகுதியில் வெடிப்புகள் ஏற்பட்டு பல குழிகள் தோன்றியிருந்தன. | காணப்படும் குறைபாடுகள் நிவர்த்திக்கப் படல் வேண்டும். | நிறுத்திவைத்தல் நிதியைப் பயன்படுத்தி குறித்த குறைபாடுகளை நிவர்த்திப்பதற்கு மதிப்பீடு தயாரிக்கபட்டு குழுவின் அனுமதி பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இப்பாதையை காபட் இடுவதற்கு ஆலோசனை முன்வைக்கப்பட்டுள்ளயைால் இக்குறைபாடுகளை நிவர்த்திப்பது அவசியமற்றது என தலைவரினால் வாய்மூல ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | உள்ளூராட்சி திணைக்கள பொறியியலாளரினால் 2018 ஆகஸ்ட் 09 ஆந் திகதி கல்பானவ மொன்னேகுளம பாதை மற்றும் உடுநொவ கல்பானவ பாதையை பரீட்சித்து அதற்கு chip sealing செய்வதற்கு வாய்மொழி மூலம் ஆலோசனை வழங்கப்பட்டிருந்தாலும் 2020 ஜூன் 08 ஆந்திகதியாகும் போதும் அதற்குரிய புதுப்பித்தல் வேலைகள் செய்யப்படாமை காரணமாக வீதி மேலும் பழுந்தடைந்து காணப்பட்டது | ஆலோசனை பிரகாரம் குறைபாடுகளை நிவர்த்தி செய்தற்கு நடடிக்கை எடுத்தல் வேண்டும் | chipsealing செய்வதற்கு மதிப்பீட்டு அறிக்கையொன்று தயாரிக்கப்பட்டு குழு அனுமதியும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. கூடிய விரைவில் இவ்வேலைகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தயவுடன் அறியத்தருகிறேன். |